திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திரு. ஆ. தியாகராஜன், எம்.எஸ்ஸி., எம்.எட்.,

ப.மு.எண். 7106/அ1/2019, நாள். 24.10.2019

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவாரூர் மாவட்டம் – மன்னார்குடி கல்வி மாவட்டம், பாமணி அரசு மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் – செல்வி. வே. சுனந்தா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் சார்பாக.

பார்வை :
1)அரசாணை எண். 101 பள்ளிக்கல்வித்துறை நாள் 18.05.2018.
2)தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) சென்னை – 6 ந.க.எண்.63975/ஆ4/,1/2017, நாள்.26.10.2017
3) திருவாரூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 9384/அ1/2017 நாள். 13.11.2017
4) மன்னார்குடி மாவட்டக்கல்வி அலுவலரின் கடித ந.க.எண். 7432/அ1/2019 நாள். 30.09.2019
5) பாமணி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.89/2019 நாள் 20.08.2019.

-----

ஆணை:

பார்வை 3 இல் காணும் திருவாரூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி – IV தேர்வு 2015–2016 (I Phase) இல் தேர்வு செய்யப்பட்டு பாமணி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் செல்வி. வே. சுனந்தா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் 15.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. பணிவரன்முறை செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பணியாளரது பணிப்பதிவேடு பார்வைக்குப்பின் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு 1 தொகுதி

24/10/19
முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவாரூர்.

24/10/19

பெறுநர்:
செல்வி. வே. சுனந்தா,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி ,
பாமணி, மன்னார்குடி கல்வி மாவட்டம்,
திருவாரூர் மாவட்டம்.( தலைமையாசிரியர் வழியாக)

நகல்:
1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பாமணி, மன்னார்குடி கல்வி மாவட்டம்
2.மாவட்டக்கல்வி அலுவலர், மன்னார்குடி